# இஸ்லாம்

## தரம் 07

### (இழந்த காலப்பகுதிக் கற்றலை ஈடுசெய்வதற்கான திட்டம்)

**சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித் துறை**

**தேசிய கல்வி நிறுவகம்**

**மகரகம**

# இஸ்லாம் - தரம் 07

| தேர்ச்சி | தேர்ச்சிமட்டம் | கற்றல் பேறுகள் | தலைப்பு | பாடநூல் பக்கம் | ஆ.வழிகாட்டி பக்கம் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|---|---|
| **தரம் 6** | | | | | | |
| 3. இஸ்லாம் கூறும் ஒழுக்கப்பணப்புகளை அறிந்து அவற்றின் முக்கியத்துவத்தை விளங்கி தனிநபர் வாழ்விலும் சமூக வாழ்விலும் கடைப்பிடித்து முன்மாதிரியாக வாழ்வதோடு ஏனையவர்க்கும் வழிகாட்டுவார். | 3.1 நாவைப் பேணி நடப்பார் | • நாவைப் பேணுவதால் கிடைக்கும் நன்மைகளை அறிந்து கூறுவார்.<br>• பேசும்போது கடைப்பிடிக்க வேண்டிய நிபந்தனைகளை இனங்கண்டு கூறுவார்.<br>• மக்கள் மனதைக் கவரும் அழகிய வார்த்தைகளால் ஈருலகிலும் நன்மை பெறலாம் என்பதை ஏற்று நடைமுறைப் படுத்துவார்.<br>• • தொடர்பாடலின் போது மனங்கவரும் வண்ணம் அன்பான வார்த்தைகளைப் பிரயோகிப்பார் | 62 | 28 | நாவைப் பேணுவோம் (14) | 3 |
| 4. இஸ்லாத்தின் மூலாதரங்களை அறிந்து அவற்றின் போதனைகளை வாழ்வில் | 4.1 அல்குர்ஆனை ஒழுங்காகக் கையாளுவார் | • அல்குர்ஆன் புனிதமான வேதநூல் என்பதை விளக்குவார்.<br>• அல்குர்ஆனை கையாளும் போது சுத்தத்தைப் பேணிக் கொள்வார்.<br>• அல்குர்ஆன் ஓதப்படும் முறைகளை அறிந்து ஓதி வருவார். | 73 | 37 | அல்குர்ஆன் அறிமுகம் (17) | 4 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| நடைமுறைப்ப டுத்துவார். | | • அல்குர்ஆனை மனனமிடுவதன் சிறப்பை அறிந்து மனனமிட்டு ஓதுவார்.<br>• • அல்குர்ஆனை அதன் புனிதம் பேணிக் கையாளுவது இபாதத் என்பதை அறிந்து செயற்படுவார். | | | | |
| 5. நபிமார்கள், ஸஹாபாக்கள் , முன்னோர்கள் வாழ்க்கை முறைகளைக் கற்று அவர்களின் முன்மாதிரிகளை ஏற்று நடப்பார். | 5.1 முஹம்மத் (ஸல்) அவர்களின் பிறப்பு, இளமைப்பருவம் தொடர்பாக அறிந்து விளக்கிக் காட்டுவார் | • நபி (ஸல்) அவர்கள் பிறந்த அரபு நாட்டின் சமூக நிலையை எடுத்துக் கூறுவார்.<br>• நபி (ஸல்) அவர்களின் இளமைக்கால துயரங்களை உணர்வுபூர்வமாக எடுத்துக் கூறுவார்.<br>• இளமையிலும் நபி (ஸல்) அவர்கள் சிறந்த பண்புகளோடு வாழ்ந்து காட்டியதை முன்மாதிரியாகக் கொண்டு வாழ்வார்.<br>• • நபி (ஸல்) அவர்களின் இளமை வாழ்வில் பங்கேற்ற மூத்தோர்களின் பெயர்களைப் பட்டியல்படுத்துவார். | 90 | 49 | ஸீரதுர் ரஸூல் (21) | 3 |
| நபிமார்கள், ஸஹாபாக்கள் , முன்னோர்கள் வாழ்க்கை முறைகளைக் கற்று அவர்களின் முன்மாதிரிகளை ஏற்று நடப்பார் | 5.2 நபி ஆதம் (அலை) அவர்களின் வரலாற்றைக் கதையாகக் கூறுவார் | • ஆதம் (அலை) படைக்கப்பட்ட நிகழ்வைக் கூறுவார்.<br>• ஆதம் ஹவ்வா சோடி தவறிழைத்த சம்பவத்தை கதையாக எடுத்துக் கூறுவார்.<br>• அவர்கள் அல்லாஹ்விடம் மன்னிப்புக் கோரிய முறையை சொல்லிக் காட்டுவார்<br>• • தவறுகளிலிருந்து பாவமன்னிப்புக் கோரி வாழ்வார் | 99 | 62 | ஆதம் (அலை) அவர்கள் (26) | 3 |
| 6. ஒவ்வோர் அம்சம் தொடர்பாகவும | 6.1 சுற்றாடலைப் பாதுகாக்கும் நடவடிக்கை | • சுற்றாடலைப் பாதுகாக்க வேண்டியதற்கான காரணங்களைக் கண்டறிந்து கூறுவார். | 116 | 67 | சுற்றாடலைப் பாதுகாப்போம் (28) | 3 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| . இஸ்லாத்திற்கென தனியானதொரு பார்வை உண்டென்பதைப் புரிந்து அதனடிப்படையில் அனைத்தையும் நோக்கித் திறனாய்வார் | களில் ஈடுபடுவார். | • சுற்றாடலைப் பாதுகாபப் தற்கான வழிமுறைகளை இனங்கண்டு கூறுவார்.<br>• சுற்றாடலின் சுத்தத்தைப் பேணுவது பர்ழு கிபாயா என ஏற்றுச் செயற்படுவார்.<br>• • சுற்றாடலைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுவார் | | | | |
| **தரம் 7** | | | | | | |
| 1. ஈமான் பற்றிய அம்சங்களை அறிந்து அதனடிப்படையில் வாழ்வை அமைத்துக் கொள்வார். | 1.1 ஈமான் பற்றிய அடிப்படைகளை அறிந்து கூறுவார். | • ஈமான் ஒரு முஸ்லிமினது வாழ்வின் அடிப்படை என்பதை ஏற்று ஒழுகுவார்.<br>• ஈமானின் வகைகளை வகைப்படுத்திக் கூறுவார்.தௌஹீதின் பிரதான உள்ளடக்கங்களை விளக்கி எழுதுவார்.<br>• ஈமானின் ஆறு அமச்ஙக்ளுக்கும் குர்ஆன் ஸுன்னா ஆதாரங்களைத் தேடி முன்வைபப்ார். | அல்லாஹ் | 1, 6 | 01,03 | 2 |
| 2. இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகள், சிறப்புக்கள், அவற்றை நிறைவேற்றும் முறைகள் பற்றி விளங்கி நடைமுறைப் படுத்துவார். | 2.1 சிறு தொடக்கு பெருந்தொடக்கு ஆகியவற்றிலிருந்து நீங்கி தொழுகைக்கு ஆயத்தமாகுவார். | • சிறு தொடக்கு,பெருந்தொடக்கு பற்றி அறிந்து கூறுவார்.<br>• சிறு தொடக்கிலிருந்து நீங்குவதற்காக செய்ய வேண்டியவற்றைச் சொல்லிக்காடவார்.<br>• தயம்மும், ஜபீரத்திற் குரிய காரணங்களையும், நிறைவேற்றும் முறைகளையும்அறிந்து கூறுவார்.<br>• வுழு செய்யும் முறையைச் செய்து காட்டுவார்.<br>• தயம்மும் செய்யும் முறையினைச் செய்து காட்டுவார். | தொழுகைக்குஆயத்தம் | 25 | | 2 |
| | 2.2 தொழுகையின் முக்கியத்துவத் | • தொழுகையின் ஆயத்தங்களை அறிந்து கடைப்பிடிப்பார்.<br>• தொழுகையின் முக்கியத்துவம் மற்றும் சிறப்புக்கள் பற்றி விளக்கிக் கூறுவார். | தொழுகை | | | 2 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | தை அறிந்து தொழுகையைப் பேணி வருவார். | • தொழுகையை உயிரோட்டத்துடன் பேணிவருவார்.<br>• தொழுகையின் முக்கியத்துவம் அறிந்து,தொழுகையின் பால் அழைப்பார். | | | | |
| | 2.3 நோன்பு பற்றி அறிந்து நோன்பு நோற்று வருவார். | • நோன்பின் மகத்துவத்தை அறிந்து கூறுவார்.<br>• ரமழான் ஒரு மனிதனில் ஏற்படுத்தும் தாக்கத்தை விளக்கிக் கூறுவார்.<br>• பேணுதலாக நோன்பு நோற்று பாவங்களிலிருந்து தவிர்ந்து வாழ்வார்.<br>• ரமழானில் செய்யப்படும் நற்செயல்களை அதிகப்படுத்துவார். | நோன்பு | | 21 | 2 |
| | 2.4 துஆக்களையும், திக்ர்களையும் அறிந்து அவற்றை ஓதி வருவார். | • ‘‘துஆ’’,‘‘திக்ர்’’பற்றி அறிந்து கூறுவார்.<br>• பிரார்த்தனையும் இபாதத்தாகும் என்பதனை அறிந்து செயற்படுத்துவார்.<br>• பொதுவான துஆக்களையும், சந்தர்ப்ப துஆக்களையும் அறிந்து ஓதிவருவார்.<br>• இறை நினைவுடன் வாழ்வது (திக்ர்) முஸ்லிமின் கடமை என்பதை அறிந்து ஒழுகி வருவார். | துஆ, திக்ர் | | 23 | 2 |
| 3. இஸ்லாத்தின் மூலாதரங்கள் பற்றிய தெளிவான அறிவைப் பெற்று அதனடிப்படை யில் வாழ்க்கை முறையை நெறிப்படுத்திக் கொள்வார். | 3.1 நான்கு வேதங்களையும் அறிந்து அல் குர்ஆனை மகத்துவப்படுத் துவார். | • நபிமார்களுக்கு வழங்கப்பட்ட நான்கு வேதங்களின் பெயர்களை அவற்றின் மொழி மூலத்துடன் முறையாகக் குறிப்பிடுவார்.<br>• அருளப்பட்ட அனைத்து வேதங்களும் முன்வைத்த வணக்கத்துக்குரியவன் பற்றிய எண்ணக்கருவை குறிப்பிடும் குர்ஆன் வசனங்களை மனனமிட்டு ஓதுவார்.<br>• வேதங்களில் இறுதியானது குர்ஆன் என்பதனை நம்பிக்கையில் இருத்திக் கலந்துரையாடுவார்.<br>• குர்ஆனின் புனிதத்தையும் அதன் மகத்துவத்தையும் அறிந்து செயற்படுவார். | வேதங்க ள் | | | 2 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | 3.2<br>அல்குர்ஆனின் ஸூராககளை வாசித்து அவற்றின் பொருளைக் கூறுவார். | • ஸூரதுல் கத்ரின் பதவிளக்கத்தைக் கூறுவார்.<br>• லைலதுல் கத்ர் இரவின் சிறப்பினை அறிந்து கூறுவார்.<br>• அல்குர்ஆன் அருளப்பட்ட சிறப்புமிக்க லைலதுல் கத்ர் இரவின் மகிமை பற்றி மற்றையவர்களுக்கும் எடுத்து விளக்குவார்.<br>• ஸூரா கத்ரின் பொருளை விளங்கி ஓதி வருவார்<br>• ஸூரதுல் அலக் முதல் ஐந்து வசனங்களினதும் பதவிளக்கத்தை எடுத்துக் கூறுவார்.<br>• ஸூரதுல் அலக்கின் சிறப்பினை அறிந்து ஒப்புவிப்பார்.<br>• இந்த ஸூராவில் அடங்கும் விடயங்களை விளங்கி, பிறருக்கும் விளக்குவார்.<br>• இந்த ஸூராவின் முதல் ஐந்து வசனங்களினதும் முக்கியத் துவத்தை எடுத்துக் கூறுவார். | சூராக்கள் | | | 2 |
| | 3.3<br>ஸுன்னாவின் முக்கியத்துவத்தை அறிந்து அவற்றை வாழ்வில் கடைப்பிடிப்பார். | • ஸுன்னா என்பதனை வரையறை செய்வார்.<br>• ஹதீஸ்களும், முஹம்மத் நபி (ஸல்) அவர்களின் வாழ்வு முறையும் அல்குர்ஆனுக்கு விளக்கமாகும் என்பதை அறிந்து விளக்குவார்.<br>• ஸுன்னாவைப் பின்பற்றி தனது சொந்தவாழ்வையும் பொதுவாழ்வையும் அமைத்துக்கொள்ள வேண்டும் என்பதனை உணர்ந்து கூறுவார்.<br>• ஹதீஸ்கள் இரண்டை மனனமிட்டு அது உணர்த்தும் கருத்துப்படி தமது வாழ்வை அமைத்துக் கொள்வார். | சுன்னா | | 41 | 2 |
| 4.<br>நபிமார்கள், ஸஹாபாக்கள் | 4.1<br>முஹம்மத்(ஸல்) அவர்களின் | • முஹம்மத் (ஸல்) அவர்களிடம் வாழ்வின் எல்லாத் துறைகளுக்குமான | ஸீறா | | | 4 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| முன்னோர் களின் வாழ்க்கை முறையைக் கற்று அவர்களது முன்மாதிரி களை ஏற்று நடப்பர். | மதீனாக் கால வாழ்வின் முன்மாதிரிகளை விளங்கிக் கடைப்பிடிப்பார். | முன்மாதிரிகள் உண்டு என்பதை விளக்கி உரையாற்றுவார்<br>• மதீனாவில் முஹம்மத் (ஸல்) அவர்கள் முன்மாதிரியான ஒரு சமூகத்தை உருவாக்குவதற்காக எடுத்த முயற்சிகளைச் சொல்லிக் காட்டுவார்.<br>• மதீன சமூகத்தை ஆற்றுப்படுத்திய வழிமுறைகளை இனம் கண்டு கூறுவார்.<br>• மஸ்ஜிதுந் நபவியின் பங்களிப்பை விளங்கி எழுதுவார். | | | | |
| | 4.2 ஸஹாபாக் களின் முன்மாதிரி களை எடுத்துக் கூறுவார். | • பிலால் (ரழி), அம்மார் (ரழி) ஆகியோரின் மூதாதையரைக் குறிப்பிடுவார்.<br>• இருவரினதும் அடிமை வாழ்வை விளக்கிக் கூறுவார்.<br>• இருவரும் இஸ்லாத்திற்காக பட்ட துன்பங்களை அறிந்து எழுதுவார்.<br>• இருவரும் நபி (ஸல்)அவர்களின் ஆசிர்வாதத்திற்கு உட்பட்டவர்கள் என்பதை எடுத்துக் கூறுவார். | ஸஹா பாக்கள் | | 52 | 2 |
| 5. பொருளீட்டல் தொடர்பாக இஸ்லாமிய போதனைகளையும் குடும்ப வாழ்வு தொடர்பாக இஸ்லாமிய கருத்தையும் விளங்கி அவற்றை வாழ்வில் முறையாகக் கடைப்பிடித்து | 5.1 வீட்டினுள் கடைப்பிடிக்க வேண்டிய அவ்ரத்தைப் பேணுவார். | • இஸ்லாமிய கண்ணோட்டத்தில் அவ்ரத் என்றால் யாது என்பதை விளங்கிக் கூறுவார்.<br>• ஆண் பெண் இருபாலாரினதும் அவ்ரத்தை வரையறை செய்து கூறுவார்.<br>• வீட்டிற்குள்ளும் அவ்ரத்தைப் பேணுவதன் முக்கியத்துவத்தை விளங்கிப் பின்பற்றி நடப்பார்.<br>• அவ்ரத்தைப் பேணி உடை அணிவதால் ஏற்படும் கண்ணியத்தையும் உளத்திருப்தியையும் எடுத்துக் கூறுவார். | அவ்வரத் | | | 2 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| வருவார் . | | | | | | |
| 6. ஒவ்வொரு அம்சம் தொடர்பாக வும் இஸ்லாத்திற் கென தனியானதொ ரு பார்வை உண்டென் பதைப் புரிந்து அதனடிப்படை யில் அனைத்தையு ம் நோக்கித் திறனாய்வார். | 6.1 தேசப்பற்றுடன் தமது பொறுப்புக்களை நிறைவேற்று வார். | • தேசத்தின் மீது பற்றுக் கொள்ள வேண்டும் என்பதை உறுதியோடு ஏற்றுக் கொண்டு செயல்படுவார்<br>• அதற்கான நியாயங்களை எடுத்துக் கூறுவார்.<br>• நபி (ஸல்) அவர்களின் முன்மாதிரிகளைச் சுட்டிக்காட்டுவார்.<br>• தேசப்பற்றின் விளைவுகளை ஆதாரங்களுடன் முன்வைப்பார். | தேசப் பற்று | | 66 | 4 |